# உதயன்

புதன் பொம்மை உள்ளே...

சுடர் : 37 | கதிர் : 348
புதன்கிழமை 09 நவம்பர் 2022
ஐப்பசி 23 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

# காணாமற்போனோர் பணியக தவிசாளருக்குப் பைத்தியமா?

## மனோ கணேசன் கடும் காட்டம்



கொழும்பு, நவம்பர் 9

காணாமற்போனோர் தொடர்பான அலுவலக தவிசாளருக்கு பைத்தியமோ தெரியவில்லை. இந்த நாட்டில் யாரும் காணாமற்போகவில்லை என்று கூறுகிறார். அப்படி பேசவேண்டாம் என்று அவருக்குக் கூறுங்கள் - இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவித்தார் மனோ கணேசன்.

15

இலங்கையின்

## கடன் மறுசீரமைப்புக்கு சீனா ஆதரவு வழங்கும்!

கொழும்பு, நவ. 9

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா முழு ஆதரவு வழங்கும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

15

வியட்நாமில் மீட்கப்பட்ட

## தமிழ் அகதிகளை அழைத்துவரத் திட்டம்

அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

வியட்நாம் கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ள 300க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை நாட்டுக்கு அழைத்துவர வியட்நாம் அதிகாரிகளுடன்

15

## இந்துக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியானார் பத்மநாதன்!



யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாக சமஸ்கிருதத்துறைத் தலைவர் ச.பத்மநாதன்

15



ஹெரோய்ன் உள்ளிட்ட

## போதைப் பொருள்களுடன் சந்தேகநபரொருவர் கைது

விரிவு - பக். 15

## போதைக்கு அடிமையான மகனை பொலிஸாரிடம் ஒப்படைத்த தாய்!

கிளிநொச்சி, நவ. 9

போதைப்பாவனைக்கு அடிமையான மகனை, பொலிஸ் நிலையத்தில் தாயொருவர் ஒப்படைத்துள்ளார். இந்தச் சம்பவம் தருமபுரம்

15

பாடசாலையில் மோதல்

## மாணவன் ஒருவன் அடித்துக்கொலை!

திருகோணமலை, நவ. 9

பாடசாலை மாணவர்கள் இருவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியதால்

15

## குழந்தையைத் துன்புறுத்தும் காணொலி; விசாரணைகளில் பல தரப்பும் அசமந்தம்

யாழ்ப்பாணம், நவ. 9

ஊர்காவற்றுறை - கரம்பொன் பகுதியைச் சேர்ந்த குழந்தையை நபரொருவர் துன்புறுத்தும் காணொலியொன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. எனினும், அது தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுப்பதில்

15

## 80 கிலோ கஞ்சா நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 9

அரியாலை - பூம்புகார் பகுதியில் மூன்று மூடைகளில் கட்டப்பட்ட நிலையில் 80 கிலோவுக்கும் மேற்பட்ட எடையுடைய கேரளக் கஞ்சா நேற்று

14

## காலநிலைச் செயற்பாடுகளுக்காக இலங்கையில் தனியான பல்கலை

எகிப்து மாநாட்டில் ஜனாதிபதி ரணில் பேச்சு

பாதிப்புறும் நாடுகளுக்கு இழப்பீடும் கோரினார்

கெய்ரோ, நவ. 9

காலநிலைச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், அதுசார் கொள்கைகளை வகுக்கவும் உலகின் முதலாவது பல்கலைக்கழகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்

15

கிளிநொச்சியில்

## வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, நவ.9

கிளிநொச்சி - புதுமுறிப்புப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் நீர்ப்பாசன வாய்க்காலிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ப.சத்தியராஜ் (வயது-36) என்பவரே இவ்வாறு

15

நாடாளுமன்றத்தில்

## சம்பந்தனுக்கு விடுமுறை

கொழும்பு, நவ. 9

உடல்நிலையைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியக்

14




MOBILE

520 ரூபா இற்கு #170# அழைத்து அல்லது

SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.

நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.

TRC/M/PRO/20/07

www.sltmobitel.lk

SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பஸ் தரிப்பிடத்தில் நேற்று சேவை ஆரம்பம்

**யாழ்ப்பாணம், நவ. 9**

**யாழ்.நகரின் மத்திய பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூருக்கான தனியார் பயணிகள் போக்குவரத்து சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் ஆரம்பிக்கப்பட்டன.**

போக்குவரத்து சேவைகளை யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், ஆணையாளர் இ.த.ஜெயசீலன், தனியார் பஸ் சங்கங்களின் தலைவர் பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதுடன், தற்போதுள்ள சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

தற்போதைய போக்குவரத்து சேவைகளில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை இனங்கண்டு அடுத்தவாரம் இந்தத் திட்டம் மேம்படுத்தப்படும் என்று மாநகர முதல்வர் தெரிவித்தார். (எ-1426,125,20,27)



## இருளுக்குள் மூழ்கியது கோத்தாவின் திட்டம்!

கொழும்பு, நவ. 9

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முன்னெடுத்த முதற்திட்டமான உடஹமுல்ல கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் நடைபாதைத் திட்டத்துக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களாக மூன்றரை லட்சம் ரூபா மின் கட்டணம் செலுத்தப்படாதுள்ளமையாலேயே மின்சாரம் துண்டிக்கப் பட்டுள்ளது என மஹரகம மாநகர சபை தெரிவித்துள்ளது.

நடைபாதையில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைத் தவிர்க்க தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் மாநகர சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## திலினி பிரியமாலி நிதிமோசடி சிங்கள நடிகரிடம் விசாரணை

கொழும்பு, நவ. 9

பல கோடி ரூபா நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகளின் அடிப்படையில் பிரபல சிங்கள நடிகரும் முன்னாள் அமைச்சருமான ஜீவன் குமாரதுங்க மற்றும் அவரது மனைவி சேரீன் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த சனிக்கிழமை குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினர்.

ஜீவன் குமாரதுங்கவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு 'ஜீவா' என்ற திரைப்படத்தைத் தயாரிக்க திலினி பிரியமாலி பணம் செலவிட்டார் என்ற தகவலுக்கமைய அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என குற்றவியல் விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## கடவுச்சீட்டு வழங்கலில் தடங்கல்

கொழும்பு, நவ. 9

பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பிராந்திய அலுவலகங்களிலும் கணினிக் கட்டமைப்பில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளமையால் திணைக்களத்தின் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இதனால் கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படும் என்று திணைக்கள பேச்சாளர் அறிவித்துள்ளார். மறு அறிவித்தல் வரை கடவுச்சீட்டுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-14,இ)

# பரீட்சைத் திகதிகளில் மாற்றங்கள் ஏற்படாது

### கல்வியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடத்துவதற்கு அறிவிக்கப்பட்ட திகதிகளில் மாற்றம் இல்லையென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை டிசெம்பர் மாதம் 18ஆம் திகதியும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி 23ஆம் திகதி முதல் பெப்ரவரி 17ஆம் திகதிவரை நடைபெறும்.

முன்னதாக இந்த வருட டிசெம்பர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்ட உயர்தரப் பரீட்சையை மாணவர்கள் மற்றும் மக்களிடமிருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய மேற்கண்டவாறு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

கொரோனா நெருக்கடி, நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் மற்றும் ஒன்பது மாகாணங்களிலும் உயர்தரப் பாடத்திட்டத்தை நிறைவு செய்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்த ஒத்திவைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அறிவிக்கப்பட்ட புதிய பரீட்சை திகதிகளில் மாற்றம் செய்யப்படாது. அறிவிக்கப்பட்ட திகதிகளில் பரீட்சைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# உயிரிழந்த யாசகருக்கு 5 வங்கிக் கணக்குகள்!

கொழும்பு, நவ. 9

புத்தளம் - சிலாபம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த யாசகர் ஒருவரிடம் 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணமும் அவரது பெயரில் ஐந்து வங்கிக் கணக்குப் புத்தகங்களும் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் சிலாபம் வீதி ஆனைவிழுந்தான் பகுதியில் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிள் மோதியதில் யாசகர் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் ஆனைவிழுந்தான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் யாசகர் சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

உடப்பு பிரதேசத்தைச் சேர்ந்த கதிரேசன் பாலமுருகன் (வயது - 49) என்ற யாசகரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த யாசகரின் பையை சோதனை செய்தபோதே அதில் 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 47 ஆயிரம் ரூபா மதிப்புள்ள 5 வங்கிக்கணக்குப் புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (எ-94,இ)

# போராட்டத்தின் போது பொலிஸார் அநாகரிகம்

### ஹிருணிக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 9

போராட்டத்தின்போது பொலிஸ் அதிகாரிகள் எம்மீது அநாகரிக முறையில் நடந்துகொண்டனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஹிருணிக்கா பிரேமசந்திரன் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற போராட்டத்தின்போது தாம் உட்பட பல பெண்கள் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டனர்.

பொதுவாக போராட்டங்களின்போது சில தள்ளுமுள்ளுகள் இடம்பெறும். அவர்கள் தற்செயலாக ஒருவரையொருவர் மோதிக்கொள்வர்.

ஆனால் குறித்த போராட்டத்தின்போது எம்முடன் போராடிய பெண்கள் மீது பொலிஸார் தகாத வார்த்தைகளை பிரயோகித்து அநாகரிகமாக நடந்துகொண்டனர். இதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன என குறித்த முறைப்பாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலத்திலிருந்து அரசு இன்னமும் பாடம் கற்கவில்லை

## சாடுகின்றார் எதிரணி பிரதம கொறடா



**கொழும்பு, நவ.9**
**கடந்தகால சம்பவங்களிலிருந்து இந்த அரசாங்கம் இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சிக்கின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம். அரசியல் முயற்சியை தோற்கடிக்க நாட்டிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் சட்டப்போரை முன்னெடுப்பார்கள்.**

இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரிக்கை விடுத்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சுயாதீன ஆணைக்குழுக்கள் பற்றி நீதி அமைச்சர் கதைக்கின்றார். இதற்கிடையில் சபாநாயகரின் செயற்பாடு மந்த கதியில் இடம்பெறுகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. சுயாதீன ஆணைக்குழு நியமனத்தில் அரசாங்கம் அவசரம் காட்டுவது தொடர்பில் எமக்கு சந்தேகம் உள்ளது. தேர்தலைப் பிற்போடுவதற்கான நகர்வாகக்கூட இருக்கலாம்.
தேர்தல்கள் ஆணைக்குழுவில் தமக்கு சார்பானவர்களை உள்வாங்கி, அதன் மூலம் தேர்தலை ஒத்திவைக்கத் திட்டம் வகுக்கலாம். புதிய தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கப்படும்வரை, தற்போது உள்ளவர்கள் பதவியில் தொடரலாம் என சட்டம் உள்ளது.
தேர்தலைப் பிற்போட்டு, அடக்குமுறையை கையில் எடுக்க அரசாங்கம் முற்பட்டால், நாட்டில் உள்ள அனைத்து சட்டத்தரணிகளும் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவார்கள். தேர்தலைப் பிற்போட நாம் இடமளிக்க மாட்டோம்- என்றார். (எ-44)

# வெளிநாட்டு கையிருப்பு 4.2 சதவீதம் குறைந்தது

கொழும்பு, நவ.9
கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில், நாட்டின் மொத்த வெளிநாட்டு கையிருப்பு மதிப்பு ஆயிரத்து 704 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளது. இது செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீதம் குறைந்துள்ளது.
இந்தக் கையிருப்புகளில் சீனாவின் ஆயிரத்து 500 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி வசதி உள்ளது. ஆயினும் அதன் பயன்பாடு நிபந்தனைகளுக்கு உட்பட்டது. சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடிய தொகை 204 மில்லியன் டொலராக மட்டுமே உள்ளது. (எ-இ)



# ஆசிரியர்களின் உடைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது

## நாடாளுமன்றில் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.9
ஆசிரியைகள் மற்றும் ஆசிரியர்களின் உடை முறைமையிலோ அல்லது மாணவர்களின் சீருடை முறைமையிலோ எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளப்போவதில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையில் கல்வி முறைமை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஆசிரியர்கள் சேலையையே அணிகின்றனர். இஸ்லாமிய ஆசிரியைகள் சேலையை அணிந்து தலைக்கு பர்தாவை அணிகின்றனர். இதுவரை ஆசிரியர்களின் உடை தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் எழவில்லை.
ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் சீருடையில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளப்போவதில்லை என விவேகானந்தா பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தேன். அங்கு வந்திருந்த 300 முதல் 400 வரையிலான பெண்கள் அதற்கு பெரும் கரகோஷம் தந்து ஆதரித்தனர்.
தமிழர்கள், கலாசாரம் அழிந்துவிடக்கூடாது என்பதிலும், சேலையே ஆசிரியைகளுக்குரிய உடை எனவும் அவர்கள் எடுத்துணர்த்தினர்.
ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் உடை முறைமையில் எவ்வித மாற்றங்களையும் கொண்டுவரப்போவதில்லை.
போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பில் கொழும்பு மாவட்டத்திலுள்ள 144 பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆலோசனை வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியிலும் முன்னெடுக்கப்படும்- என்றார். (எ-இ)

# அரசறிவியல் மன்றத்தால் நேற்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 9
சங்கானை சைவப் பிரகாச மகா வித்தியாலயத்தின் அரசறிவியல் மன்றத்தால் 'அதிகாரம் இதழ் 01' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று பாடசாலை பிரதான மண்டபத்தில் அரசறிவியல் மன்றத் தலைவர் யோ. அலெக்சன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் உதயன் குழும தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.
அதனைத் தொடர்ந்து நூலின் அறிமுக உரையை பாடசாலையின் அரசறிவியல் மன்றப் பொறுப்பாசிரியர் செ.பிரதாப், நூலின் ஆய்வுரையை யாழ். பல் கலை அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.



நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உதவிப் பணிப்பாளர் சமூக விஞ்ஞானம் திருமதி லதிஸ்கி ரேஸ் விக்ரர், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம், பாடசாலை அதிபர் சிறிதரன், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)



# தனுஷ்கவுடன் தொடர்பில்லை

## பதறுகிறார் நாமல்

கொழும்பு, நவ.9
கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க சம்பந்தப்பட்ட சம்பவத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டு கிரிக்கெட் விளையாட்டை அரசியலாக்குவதன் மூலம் தேசத்தின் நற்பெயருக்கும் விளையாட்டுத்துறையின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படும் என முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
விளையாட்டுஅமைச்சர்பதவியிலிருந்து விலகிய பின்னர் எந்தவொரு விளையாட்டு நிர்வாகத்திலும் தாம் ஈடுபடவில்லை எனத் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றில் நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)




# தனுஷ்க சிக்கலை விசாரிக்க விசாரணைக் குழு அமைப்பு

கொழும்பு, நவ.9
பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தனுஷ்க குணதிலக்க தொடர்பில் விசாரணை நடத்த மூவரடங்கிய விசாரணைக் குழுவை ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.
ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சிசிர ரத்நாயக்க, சட்டத்தரணி நிரோஷன பெரேரா மற்றும் சட்டத்தரணி அசேல ரேகவ ஆகிய மூவரடங்கிய குழு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.
இலங்கை தேசிய கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பிலும் இந்தக் குழு விசாரணை நடத்தவுள்ளது.
குறித்த சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக் குழுவினால் நடத்தப்படும் விசாரணைகளின் பின்னர் வழங்கப்படும் அறிக்கையின் அடிப்படையில், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாகக் குழு உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதில் ஏதேனும் தவறு அல்லது அலட்சியம் செய்திருப்பது நிரூபிக்கப்பட்டால், வீரர்கள் மற்றும் அதிகாரிகள் மீதும் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகங்கள்: மௌனம் காக்கின்றது அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



**கொழும்பு, நவ.9**

**இலங்கையில் இயங்கிவரும் சர்வதேச பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், அரசிடமிருந்தோ அல்லது கல்வி அமைச்சிலிருந்தோ எவ்வித பாதுகாப்பும் அங்கு வழங்கப்படுவதாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இது உண்மையா?**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்ற அமர்வின்போது கேள்வி எழுப்பினார்

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இந்த நாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நாம் மிகவும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. நாட்டில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழுவும் சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட அனைத்து துஷ்பிரயோகங்களில் இருந்தும் இந்நாட்டு சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பாதுகாப்பான நாளைய எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்க அரசு அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ளது. இதைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, பின்வரும் கேள்விகளுக்கு அரசிடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில்,18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் பலாத்காரம், கொடுமை போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு எத்தனை முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? அந்த முறைப்பாடுகள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை எவ்வாறு செயற்பட்டது என்பது குறித்தும், குறிப்பாக பெறப்பட்ட தண்டனைத் தீர்ப்புகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய விரிவான அறிக்கையை இந்தச் சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா? சிறுவர் துஷ்பிரயோ கத்தில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம், செயல்முறையில் அரசாங்கம் திருப்தியடைகின்றதா?

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும், அத்தகைய துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும், சிகிச்சையளிப்பதற்கும் ஒரு தேசியக் கொள்கையை உருவாக்கும் நோக்கத்துக்காக 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தச் சட்ட அடிப்படையில் தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை நிறுவப்பட்டுள்ளதா அவ்வாறில்லையெனில், தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையை ஏன் விரைவில் நடைமுறைப்படுத்தக் கூடாது? சர்வதேச பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் பட்சத்தில் அரசிடமிருந்தோ அல்லது கல்வி அமைச்சிலிருந்தோ எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படுவதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது உண்மையா?- என்றார். (எ-22)

# வெளிநாடுகளிலிருந்து மசாஜ் நிபுணர்கள்

கொழும்பு, நவ. 9

நாட்டில் அனுபவம் மிக்க மசாஜ் நிபுணர்கள் இன்மையால் வெளிநாடுகளில் இருந்து அனுபவம் மிக்க மசாஜ் நிபுணர்களை அழைத்து வர தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மசாஜ் நிபுணர்களை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட விருந்தகங்களில் மாத்திரம் அனுமதிக்க அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கும் அனுபவம் மிக்க மசாஜ் நிபுணர்கள் இன்மை யால் பிரதான விருந்தகங்களில் உள்ள பல மசாஜ் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பிரதான விருந்தகங்களின் கோரிக்கைக்கு அமைய வெளிநாடுகளில் இருந்து மசாஜ் நிபுணர்களை அழைத்து வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ-14.இ)

# எரிபொருள் ஒதுக்கீடு போதாது: கட்டணங்களில் மாற்றமில்லை

## அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் தொழிற்சங்கம் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 9

முச்சக்கரவண்டிக்கான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டாலும் கட்டணத்தைக் குறைக்கும் சாத்தியமில்லை என அகில இலங்கை முச்சக்கரவண்டிச் சாரதிகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் லலித் தர்மசேகர மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முச்சக்கர வண்டிகளுக்கு ஐந்து லீற்றர் எரிபொருள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது மேல் மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டிகளுக்கு 10 லீற்றர் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதை வரவேற்கின்றோம்.

ஆயினும் இந்தத் தொகை போதுமானதல்ல. ஆகக்குறைந்தது தினமும் 5 லீற்றர் அல்லது வாரத்துக்கு 20 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டாலே முச்சக்கரவண்டிச் சவாரிகளை முறையாக மேற்கொள்ளமுடியும்.

எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதால் எந்தப் பயனும் இல்லை. பெற்றோல் இருப்பு என்பதே அவசியமானதாகும் - என்றார்.

இதேவேளை, எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பையடுத்து நாடளாவிய ரீதியில் முச்சக்கரவண்டிக் கட்டணம் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அகில இலங்கை முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தாய்லாந்து தூதுவர் இல்லத்தில் திருட்டு!

கொழும்பு, நவ. 9

கொழும்பிலிலுள்ள தாய்லாந்து தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இல்லத்துக்குள் நுழைந்த மர்ம நபர் ஒருவர் சுமார் 5 ஆயிரம் ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் 3 லட்சம் ரூபா பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளார் என தாய்லாந்து தூதுவரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் சந்தேகநபர்கள் எவரும் கைதாகவில்லை எனவும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# 2023 ஆம் ஆண்டுக்கான செலவினம் 7.9 ட்ரில்லியன்

கொழும்பு, நவ. 9

2023 ஆம் நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த செலவினம், 7.9 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

கடந்த 2022 ஆம் நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் செலவினம் 6.2 ட்ரில்லியனாக அமைந்திருந்த நிலையில், 2023 ஆம் நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த செலவினம், 7.9 ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது. அதாவது, அரசாங்கத்தின் மொத்த செலவினம் ஆயிரத்து 657 பில்லியனாக அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் செலவினம் அதிகரித்துள்ளமைக்கு நிகராக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் எவ்வாறான திட்டங்களை முன்வைத்துள்ளது என்பதையும் அரசாங்கம் அறியத்தர வேண்டும் - என்றார். (எ-14.இ)

# 2023 வரவு - செலவுத் திட்டம்; மக்களே அரசின் பலிக்கடா!

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களை மேலும் மிக மோசமான நெருக்கடிகளுக்குள் தள்ளும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுயாதீன எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதில் நடைமுறைக்கு சாத்தியமில்லாத பல திட்டங்கள் உள்ளன. அரசாங்கம் வரி அதிகரிப்பை மாத்திரம் பிரதான பொருளாதாரக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

விருப்பத்துடன் வரி அதிகரிக்கவில்லை. மாற்றுத் திட்டம் இல்லாதமையாலேயே வரி அதிகரிக்க நேரிட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுகிறது.

வரி அதிகரிப்பு நடுத்தர மக்களின் வாழ்க்கையில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை அரசாங்கம் கவனத்திற்கொள்ளவில்லை.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இதுவரை எதுவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு நடுத்தர மக்களை பலியாக்குவது வெறுக்கத்தக்கதொரு செயற்பாடாகும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

“எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்”

— லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)



# தேவை ஒரு சிவில் கட்டமைப்பு

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில், அதன் மீது ஆதிக்கம் செலுத்துவது யார் என்ற உலகப் போட்டி இப்போது ஆரம்பித்திருக்கின்றது. அதற்கான துருப்புச் சீட்டுக்களை ஒவ்வொரு தரப்பும் கையில் எடுக்க முனைந்துகொண்டிருக்கின்றன.

தமிழர் விவகாரங்கள் மீதான சர்வதேசத்தின் பார்வை இப்போது சற்று தீவிரமாகியிருக்கின்றது என்பதை உணர்த்தும் சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகள் இலங்கைக்குப் படையெடுப்பதும் தமிழர் பகுதிகளுக்குப் பயணிப்பதும் அண்மைய நாள்களில் சர்வ சாதாரணமாகியிருக்கின்றது. இறுதியாக அமெரிக்க செனட் சபையின் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றது. வழமைபோன்று இல்லாது இரகசியமான முறையில் இந்தக் குழுவின் பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வடக்குக்கு வந்திருந்த அந்தக் குழு இலங்கை இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் தமிழர் நிலங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றது. வழமைபோன்ற விசாரிப்புக்களாக இல்லாது தாங்கள் சேகரித்து வைத் திருக்கும் தரவுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலான வருகையாக இது அமைந்திருந்தது.

இலங்கை பொருளாதார நெருக்கடி காரணமாக, தனக்கு உதவும் நாடுகள் சொல்வதையெல்லாம் கேட்கும் நிலையிலேயே இப்போது இருக்கின்றது. அதைவிட ஜனாதிபதி ரணிலும் அமெரிக்கா சார்பான சிந்தனையைக் கொண்டவர். இப்படிப்பட்ட நிலையில், அதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தமிழ் தரப்புக்களின் சாதுரியம். இதுவரை காலமும் எங்களுடைய பிரச்சினைகளை சர்வதேசம் கேட்கவேண்டும், எமக்கான தீர்வைப் பெற்றுத்தர ஆவன செய்யவேண்டும் என பல வடிவங்களில் கவனவீர்ப்புகளை தமிழர்கள் நடத்தியிருந்தார்கள். ஆனால், இப்போதோ 'உங்கள் பிரச்சினைகள் என்ன? நாங்கள் தீர்த்து வைக்கிறோம்' என சர்வதேசமே இறங்கிவந்து, வரம்தரக் காத்திருக்கிறது. அதற்கான ஆகப்பிந்திய உதாரணமே, அமெரிக்க செனட் குழுவின் வருகை. 'கடலில் இருக்க வேண்டிய கடற்படைக்கு வலி.வடக்கில் ஏன் இத்தனை ஏக்கர் காணி?' என்று செனட் குழு கேட்டவிதத்தில் இருந்தே, அவர்கள் எவ்வளவு தூரம் பிரச்சினைகளை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்துள்ளனர் என்பது புலனாகும். வெறுமனே புள்ளிவிவரங்களை எடுத்து, அதனை வைத்து அறிக்கையொன்றை வெளியிடுவதோடு நில்லாமல், இலங்கை அரசாங்கத்துக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து, படையினர் வசமுள்ள மக்களின் காணிகளை அமெரிக்க செனட் குழு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமென்ற சிறு நம்பிக்கை இப்போது பிறந்துள்ளது.

ஆயினும் இந்தச் சமயத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு, அவை தொடர்பில் தீர்வுக்காக அழுத்தம் கொடுக்க வேண்டிய தமிழ் அரசியல்வாதிகளோ, 'கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார்?' என்ற குடுமிப்பிடிச் சண்டையில் அக்கறையாக இருக்கிறார்களே தவிர, மக்கள் தொடர்பிலோ அவர்களது பிரச்சினைகள் தொடர்பிலோ துளியேனும் கரிசனை காட்டுவதாகத் தெரியவில்லை. இப்படி நாற்காலிகளுக்காக அலைந்து கொண்டிருப்பவர்களை விடுத்து, மக்களின் பிரச்சினைகளை ஒரேகுரலில், விஞ்ஞானபூர்வ தரவுகளோடு, அரசியல் ஆதாயமில்லாமல், இதயசுத்தியோடு சர்வதேசத்துக்கு எடுத்துரைப்பதற்கேனும் வலுவான ஒரு சிவில் சமூகக் கட்டமைப்பு தமிழ் மக்களுக்கு இப்போது அவசியம். ஆனால், அதற்கான முயற்சிகள் பலவும் தோற்றுக்கொண்டேயிருக்கின்றன. சிவில் சமூகக் கட்டமைப்பை உருவாக்குதல் என்ற பூனைக்கு யாரேனும் மணிகட்ட மாட்டார்களா? என்று ஏங்கிக் கொண்டே இருப்பதுதான் நம் விதியோ?




# சட்ட ஆலோசனையின்படியே தேர்தலை நடத்த நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 9**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவது தொடர்பில் வழங்கப்படும் சட்ட ஆலோசனையின் பிரகாரம், தேர்தலின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் செய்வதற்கு தேசிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதால் தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்படுமா என ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் சட்ட ஆலோசனையை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது. ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் நடத்துவதில் சிக்கல் எழுந்துள்ளது. எனவே அதுதொடர்பில் சட்ட ஆலோசனை கோரி இருக்கின்றோம்.

எனவே, சட்ட ஆலோசனை கிடைக்கப்பெற்றதும் சட்ட ஆலோசனையின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம் - என்றார்.

இதேவேளை எல்லை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டாலும் தேர்தல் நடத்துவதற்கு எந்தப் பாதிப்பும் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-14.இ)

# அரசின் சதி முயற்சிக்குள் சிக்கக்கூடாது தேசப்பிரிய

## சுதந்திரக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, நவ. 9

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள சதித்திட்டத்துக்கு முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உடந்தையாகிவிடக் கூடாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தேர்தல் எல்லை நிர்ணயக் குழுவின் தலைவராக முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேர்தல்.காலம் தாழ்த்தப்படுவதற்கு மஹிந்த தேசப்பிரிய கடும் எதிர்ப்பை வெளியிட்ட ஒருவராவார். எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்று அவரிடம் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் தேர்தலை காலம் தாழ்த்தும் சதித்திட்டத்துக்கு மஹிந்த தேசப்பிரிய சதிகாரராகிவிடாமல், அவர் மீது மக்கள் கொண்டுள்ள மரியாதையையும் நம்பிக்கையையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாறாக இதில் அவரது பங்களிப்பும் காணப்படுமாயின் இதுவரை காலமும் பேணிப் பாதுகாத்த அவரது நற்பெயருக்கும் களங்கம் ஏற்படும் - என்றார். (எ-14.இ)

நாளை 10.11.2022 வியாழக்கிழமை ஐப்பசி 24

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம்: 01.35 - 03.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனம் தேவை.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக் கொண்டு கவனமாக செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் நன்றாக இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

# அரசியல் தீர்வு ஏற்பட்டாலே பொருளாதாரத் தீர்வு கிட்டும்

## கனேடிய முதலீட்டாளர்களுக்கு சம்பந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.9

**நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று கிட்டினால் மட்டுமே அதனோடு சேர்ந்து பொருளாதாரத் தீர்வும் சாத்தியமாகும்-இவ்வாறு தம்மைச் சந்தித்த தமிழ்க் கனேடிய முதலீட்டாளர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.**

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் உள்ள சம்பந்தனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

சில தமிழ் கனேடிய முதலீட்டாளர்கள் அந்த நாட்டின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு சம்பந்தனைச் சந்தித்து உரையாடினர். இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும் பங்குபற்றினர்.

இலங்கையில் தமிழ் கனேடிய புலம்பெயர் மக்கள் முதலீடு செய்ய எடுத்த முடிவை சம்பந்தன் பாராட்டி, வரவேற்றார்.

நாட்டுக்கும் தமிழர் தேசத்துக்கும் முதலீடுகள் அவசியம். ஆகவே இந்த முதலீடுகள் தமிழர் தாயகத்துக்கும் வரப்பிரசாதம்தான். இதன்மூலம் எமது தமிழர் தாயகத்துக்கும் விருத்தியும், எமது மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டும். ஆனாலும், நாட்டின் பொருளாதார முயற்சி என்பது வெறுமனே வெளிநாட்டு முதலீடுகள் மூலம் மட்டும் எட்டப்பட்டு விடமுடியாது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான சூழமைவு இங்கு ஏற்பட வேண்டும். தேசிய இனப் பிரச்சினையை மோசமாக கையாண்டதன் விளைவுதான் இந்த பொருளாதாரப் பிரச்சினை; நெருக்கடி.

இதிலிருந்து மீள்வதாயின் முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கும் இணக்கமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அத்தகைய சூழலில்தான் பொருளாதார மீட்சியும் சாத்தியமாகும்.

நமது தாயகத்தில் முதலீடு செய்யும் அதேசமயத்தில், அந்த முதலீடு மூலம் நாடு பொருளாதார மீட்சி பெறக்கூடிய சூழமைவை உருவாக்குவதற்காக உங்கள் நாட்டு அரசுகள் மூலம் இங்கு தேசிய இனப்பிரச்சினைக்கு இணக்கமான நியாயமான தீர்வு கிட்டுவதற்கான அழுத்தத்தையும் நீங்கள் கொடுக்கவேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டுக்கும் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் உள்ள பிரிக்க முடியாத இணைப்பை புரிந்துகொண்டு, அதன் அடிப்படையில் முதலீடுகளை நீங்கள் முன்னெடுக்க வேண்டும் என்று சாரப்பட சம்பந்தன் இந்தச் சந்திப்பில் கருத்துரைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-22)

# மின்கட்டண அதிகரிப்பு: விகாரைகளில் எதிர்ப்பு

கொழும்பு, நவ.9

விகாரைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களில் மின் கட்டணம் குறைக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உந்துவப் போயா, நத்தார் சமயச் சடங்குகள் மற்றும் புத்தாண்டு தினத்தில் மத வழிபாட்டுத் தலங்கள் இருளில் மூழ்கச் செய்யப்படும் என கலஹா சிறி சாந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போயா தின சமய வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகரித்த மின்சாரக் கட்டணத்துக்கு எதிராக மகா சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தியபோது, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் கண்டிக்கு வந்து மல்வத்து அஸ்கிரிய உள்ளிட்ட மும்மதத் தலைவர்களையும், மதச்சார்பற்ற தலைவர்களையும் சந்தித்து மின்கட்டண சலுகை வழங்கப்படும் என உறுதியளித்தார். பிரிவெனாக்களுக்கு சூரியசக்தி திட்டத்தை இரண்டு மாதங்களுக்குள் தயாரிப்பதாகவும் தெரிவித்தார். ஆனால் அந்த வாக்குறுதியின்படி இதுவரை மின்கட்டணம் குறைக்கப்படவில்லை. சூரியஒளி மின்சாரம் வழங்கப்படவில்லை. இந்த மாயை தொடர அனுமதிக்கமாட்டோம்- என்றார். (எ-இ)

# பல்கலை மாணவர்கள் 36 பேர் திடீர் சுகவீனம்

கொழும்பு, நவ.9

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தைச் சேர்ந்த 36 மாணவர்கள் திடீர் சுகவீனம் காரணமாக திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய் நிலைமைகளைக் கொண்டுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை - உணவு ஒவ்வாமை காரணமாக இந்த மாணவர்கள திடீர் சுகவீனமடைந்திருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# வரிகள் விதிப்பதை விடவும் மோசடியை விசாரியுங்கள்!

## ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை

மக்களைக் கொல்லாமல் கொல்லும் வரி கொள்கைக்குப் பதிலாக நாட்டில் நடந்த ஊழல், மோசடிகள் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணைகளை நடத்தி, கொள்ளையிடப்பட்ட பணத்தை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் -இவ்வாறு சுதந்திர மக்கள் காங்கிரஸின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்காலத்தில் அதிகமான வரிச் சுமை காரணமாக மக்கள் மூச்சு விட முடியாது கொல்லாமல் கொல்லும் நிலைமை ஏற்படும். வரியைத் தவிர வருமானத்தைத் தேடும் மாற்று வழியில்லை என அரசாங்கம் கூறி வருகிறது.

மக்களைத் தொடர்ந்தும் வரிச் சுமையால் வதைக்காது மக்களிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட பணத்தை மீண்டும் திறைசேரிக்கு பெற்றுக்கொள்வது போன்ற வருமானம் பெறக்கூடிய முறை சம்பந்தமாக அரசாங்கம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

79 டொலருக்குக் கொள்வனவு செய்யக்கூடிய ஒரு மெற்றித் தொன் நிலக்கரியை ஒரு மெற்றித்தொன் 284 டொலர் என்ற விலையில் 63 லட்சம் மெற்றித் தொன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று கணக்காய்வு அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

புதிய களனிப் பாலம் மற்றும் அத்துருகிரிய இடையிலான அதிவேக நெடுஞ்சாலை சம்பந்தமாக மோசடியான கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளதாகவும் அதன் மூலம் கோடிக்கணக்கான ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இவை சம்பந்தமாக மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, கொள்ளையிடப்பட்ட பணத்தை மீண்டும் மக்களிடம் வழங்க வேண்டும்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"தினைத்துணை நன்றி செயினும்
பனைதுணையாக் கொள்வர் பயன்தெரிவார்." -வள்ளுவர்





பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி

# வடக்கை தாலாட்டும் தாலங்கள்

தமிழர் தம் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்து தொன்றுதொட்டு வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் சுயதொழிலையும் போஷாக்கையும் தன்னிறைவாக அமுதசுரபி போல அள்ளி வழங்கி, தமிழரைத் தன்மானத்துடன் வாழவைத்த பனை தமிழரின் தொல்பொருள் சின்னம் என்று கூறுவதில் மிகையாக ஏதுமில்லை. இலங்கையில் தமிழர்களது வாழ்க்கை முறையானது இயற்கையுடன் ஒன்றித்தே காணப்பட்டது. அந்த வகையில் நோக்கும்போது பனையும் அதன் வளமும் தமிழரது மரவுரிமையாகவும், பண்பாடாகவும், பாரம்பரிய ஆரோக்கிய உணவாகவும் தமிழரை தலைநிமிர்த்தி வாழ வைத்தது.

### உலகப்பொதுவானது

பனை பற்றிய உலகளாவிய கருத்தை ஒப்புநோக்குவோமானால் ஆபிரிக்காக் கண்டத்திலே முதன்முதலாக பனை தோற்றம் பெற்றதாகவும் அதன் பின்னரே ஆசியா, தென்னாசியா நாடுகளுக்கு பனை வந்தது எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். தென்னாசியாவிலும், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலேயே பனை கூடியளவு செறிந்து காணப்படுகின்றது. தாலம் என்பது தமிழில் பனைக்கு வழங்கப்படும் பெயராகும். இந்தச் சொல் வடநாட்டில் இருந்து பரவியதாகவும் கம்போடியாவிலும் தமிழ்நாட்டிலும் ஒரு காலத்தில் பனைமரமே அந்த நாடுகளில் சின்னமாக இருந்ததெனவும் சொல்லப்படுகின்றது.

ஆனால், வடக்கு மாகாணத்தின் இலட்சினையிலும் அதன் கீழ் பிரிந்து பரந்து காணப்படும் சபைகள், கழகங்கள், அமைப்புக்கள் என்பனவற்றின் இலட்சினைகளிலும் நிமிர்ந்த பனையை மாற்றாமல் பாதுகாத்து வருவது தமிழரின் மரபுரிமை மங்காப் புகழும் செழிப்புற்றுக் காணப்படுவதையே எடுத்தியம்புகின்றது. இதனை எமது தலைமுறையில் வளம்மிக்கதாக உருவாக்கி அடுத்த தலைமுறையினருக்கு பொக்கிஷமாக வழங்கவேண்டும். வரலாற்றுப் பார்வையில் பனையை டச்சுக்காரரும் போர்த்துக்கேயரும் ஆங்கிலேயரும் 'சீனி மரம்' என்றும் கம்போடியாவில் 'சீனிபாம்' என்றும் மலையாளத்தில் 'தாவி' என்ற பெயரிலும் சமஸ்கிருதத்திலும் சிங்களத்திலும் 'தள' என்றும் அழைக்கப்பட்டது - அழைக்கப்படுகின்றது.

### அணிகலன்களை அள்ளித் தந்தது

பண்டைய காலங்களில் இயற்றப்பட்ட தமிழ் நூல்களெல்லாம் தொடக்கத்தில் பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டவையே. இதற்கு மேலாக பனையோலையில் செய்யப்பட்ட ஆபரணங்களை பண்டைத் தமிழர்கள் அணிந்து அழகு பார்த்தார்கள். குறிப்பாக தாலி, காதோலை போன்ற முக்கியமான அணிகலன்கள் பனையோலையில் தான் செய்து அணியப்பட்டன என்ற செய்தி அற்புதமானது.

தொன்மை சார்ந்த தமிழ் நூலாம் தொல்காப்பியம் தொடக்கம் சங்க நூல்களிலும் திருக்குறள், திருமுறைகள், இதிகாச புராணங்கள், பிற்பாக நூல்கள் யாவற்றிலும் பனை விருட்சம் பற்றிய குறிப்புக்களும் சிறப்புக்களும் கூறப்படுவதுடன் பனைமரம் பற்றி மிகப் பழைய தகவல்களையும் குறிப்புக்களையும் தாங்கிய நூலொன்றாக பனைமரக் காவியம் என்னும் 'தால விலாசம்' அமைகின்றது. விண்ணுலகத்தில் உள்ள ஐந்து தேவ விருட்சங்களுக்கு நிகராக எம்மிடத்தில் உள்ள தெய்வப் பனை ஒன்றே போதும் என்ற கருத்திலமைந்த கும்மிப்பாடல் ஒன்றில் பூலோக கற்பக தருவின் பெருமை, புகழ் எடுத்தியம்பப்படுகின்றது.

**'விண்ணுலகத்தினுள் ஐந்து தருக்களை**
**வேண்டும் பொருள்தர வேட்டைத் திம்**
**மண்ணுலகத்தினில் தெய்வப் பனையொன்றை**
**வள்ளல் அருளின் ஞானப் பெண்ணே"**

இவ்வாறாக அமைகின்றது அந்தப் பாடல்.

### தமிழர்களின் அரணானது

தமிழர் தம் வரலாற்றுப் பாதையை முப்பது வருட போராட்ட காலப் பகுதியில் நோக்குவோமானால் பனை உணவாகவும், உறையுளாகவும், உயிரைப் பாதுகாக்கும் அரணாகவும், ஆடைகளின் அழுக்கை அகற்றிய நிவாரணியாவும், மருத்துவ குணம் கொண்ட பொருளாகவும், பொருள்களை பாதுகாக்கும் பாத்திரமாகவும், பானமாகவும், வேலியாகவும் பயன்களை அள்ளி அள்ளி வழங்கியது. இதனால் போராட்ட காலத்தில் வடக்கு - கிழக்கு மக்களுக்கு பொருளாதாரத் தடையை விதித்தபோதும் பனை என்னும் விருட்சத்தினால்தான் பட்டினிச் சாவில் இருந்து தமிழன் தப்பிப் பிழைத்தான்.

சீன நாட்டின் தேவையற்ற பிளாஸ்ரிக் பொருள்களை இலங்கைக்கு இறக்குமதி செய்து அதில் மோகம் கொண்டவர்களாக வடக்கு மக்கள் பிளாஸ்ரிக் பாவனையை அதிகரித்துள்ளனர். இதன்மூலம் பல்வேறுபட்ட நோய்களையே தம்மகப்படுத்தியுள்ளனர். ஆனால், வடக்குக்கு இயற்கை தந்த அரிய பொக்கிஷங்கள் பனையும் பனை சார் உற்பத்திப் பொருள்களுமாகும். இதனை உள்ளூராட்சி சபைகள் மக்கள் மனதில் விதைக்க வேண்டும்.

பனையொன்றின் ஆயுள்காலம் 120-150 வருடங்களாகும். 'பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம்' என்ற பழமொழி இன்றும் பிரசித்தமானது. பனையின் ஆயுட்காலம் எவ்வளவு கூடியதோ அதே போல பனையில் இருந்து பெறப்படும் பொருள்களும் மிகவும் உறுதியானவை. நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை.


### பனையும் வளமும்

பனையைப் பயன்படுத்தி கிராம மக்கள் தொழில் செய்து அதனை ஜீவனோபாயமாக்கி வெற்றிகரமாக வாழ்வு நடத்துகின்ற நிலமை இன்றும் எம் பிரதேசத்தில் உள்ளது.

கலை, பண்பாடு, கலாசாரம் வளர்வதற்கும் மக்களுக்கு சுயதொழில் வாய்ப்பை வழங்குவதற்கான மூலப் பொருள்களை வழங்குவதிலும் சிறப்பிடம் பெறுவது பனை வளமாகும்.

இவ்வாறு தமிழ்மக்களின் வாழ்க்கையோடு தொன்றுதொட்டு மருவி வந்த பனை வளத்தை இலங்கை அரசு முன்னுரிமை கொடுத்து ஊக்குவிக்கவில்லை. இதனால் பனையும் தமிழ் மக்களின் தீர்வுப் பொதி போல தள்ளாடிய நிலையிலேயே காணப்படுகின்றது. பனைமரப் பயன்பாட்டுக்கும் தேயிலை, இறப்பர், தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் அரசால் முன்னரே வழங்கப்பட்டிருக்குமானால் பனை மர, பனை வள அபிவிருத்தி பன்மடங்கு பெருகியிருக்கும்.

பனந்தொழில்கள் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் 'தங்கச்சுரங்கம்' இந்தச் சுரங்கத்தில் இருந்து மேல் எழுந்தவாரியாகவே தங்கம் எடுக்கப்பட்டு வருகின்றது. இதனை ஆழமான முறையில் அறிவுபூர்வமாக தோண்டி எடுத்தால் பனை வளரும். அது, தன்னை நம்பி வாழும் மக்களை வளமுடன் வாழவும் வைக்கும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நவரட்ணம் கனகம்மா

தோற்றம்
22.04.1940

மறைவு
06.11.2022

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் நல்லூர் சிவன் புது வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி நவரட்ணம் கனகம்மா கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லர் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்லர் நவரட்ணம் (யோகர் - M.E.S.N.Beedi Company, M.E.S.N Buildings உரிமையாளர், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ரவீந்திரன் (லண்டன்), ரவிக்குமார் (நோர்வே), ரவிச்சந்திரன் (நோர்வே), சந்திரிகா, ரவிசங்கர் (லண்டன்), ரஜனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற தமிழரசி ஆகியோரின் அன்பு தாயாரும், ரேவதி (லண்டன்), சிராஞ்சினி (நோர்வே), ரவிசக்தி (லண்டன்), பழனிப்பழம் (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), கோகுலவாணி (லண்டன்), தர்மபாலன் (பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஹீனா, வர்ஷா, ஆதித்யா, விதுஷா, சந்தோஷ், ராகவி, ராகவன், ஜோதி, பவதர்ஷினி (உயிரியல் விஞ்ஞானம் - கிழக்கு பல்கலைக்கழகம்), பவபிரகாஷினி (யா/ இந்து மகளிர் கல்லூரி), சக்திசரவணன் (யா/ மத்திய கல்லூரி), காவியா, சஞ்ஜெயன், நிருத்திகா, (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), குகப்பிரியன் (யா/ புனித பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சின்னம்மா, காலஞ்சென்றவர்களான Dr. அரியரட்ணம், சுப்ரமணியம், நாகம்மா, இராசம்மா, பொன்னம்மா, பத்மநாதன், நடராசா, கணேசபிள்ளை, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, நடராசா ஆகியோரின் மைத்துனியும், இராமலிங்கம் - யோகம்மா (கனடா), தம்பிரட்ணம் - நேசமலர் (கனடா), Dr. இராசையா - இந்திராகாந்தி (லண்டன்), அற்புதச்சந்திரன் - விலாகாந்தி, நீதிராசா (லண்டன்), தர்மராசா (லண்டன்), ஆனந்தராசா (லண்டன்), காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், நல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
அருணாசலம் -பழனிப்பழம் :077 078 3132
பழனிப்பழம் - சந்திரிகா : 077 005 8627
ஆறுமுகம் - தர்மபாலன் : 077 045 8789

(CS 21683) (3/6)

தகவல்
குடும்பத்தினர்
62, சிவன் புதுவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## நடசேன் பரமேஸ்வரி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் பரமேஸ்வரி அவர்கள் கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும், செல்லர் நடேசனின் பாசமிகு மனைவியும், தர்மசீலன் (சுவிஸ்) சத்தியசீலன் (சுவிஸ்), விஜிதா (லண்டன்), கவிதா (லண்டன்), ஜெயசீலன் (உரும்பிராய்) கீதா (ஹொலன்ட்) ஆகியோரின் அன்பு தாயாரும், யூடினா, குமுதினி, தர்மசீலன் (கரணன்), குகநேசன், குமார், மிதிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், தவஞானம், அன்னப்பிள்ளை, கணேசு, குவேந்திரன் மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.11.2022) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் அடக்க ஆராதனை நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பண்ணை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிறப்பு
12.07.1946

இறப்பு
06.11.2022

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

07 7 493 3953

(CS 21682 ) (3/6)


தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 67ஆவது வாழ்த்து

# பேராயர் டானியல் செல்வரட்ணம் தியாகராஜா அவர்கள்

**67ஆவது** பிறந்தநாளை இன்று (09.11.2022) செவ்வாய்க்கிழமை கொண்டாடுகின்றார்



தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆதீனத்தின் 4ஆம் பேராயராகவும், அமெரிக்க சிலோன் மிசனின் தலைவருமாகிய அதிவணக்கத்திற்குரிய டானியல் செல்வரட்ணம் தியாகராஜா (Rt. Rev. Dr Daniel Selvaratnam Thiagarajah) இன்று தனது 67ஆவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

பேராயர் தியாகராஜா தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் 4ஆம் பேராயராக ஆகஸ்ட் 21, 2006 அன்று திருநிலைப்படுத்தப்பட்டார். தென்னிந்திய மாநிலங்களிலும், இலங்கையிலும் இயங்கி வரும் 4.2 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட CSI சபையின் மூத்த பேராயராவார்.

பேராயர் திரு ஆர்.கே. மற்றும் திருமதி எல்.சி. தியாகராஜா அவர்களின் ( Mr R.K. and Mrs L.C. Thiagarajah) ஏழு குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தின் நான்காவது குழந்தையாக பிறந்தார். அவர் தனது ஆரம்ப கல்வியை Holy Family English Convent பள்ளியிலும், வேம்படி பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் (Vembadi Girls' High School), பின்னர் யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் (Jaffna Central College) கல்வி கற்றார். அவர் மத்திய கல்லூரியில் பயின்ற வேளையில் மட்டைப்பந்து (Cricket) விளையாட்டில் சிறந்து விளங்கி கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர். 1975 இல் "வடக்குப் போரில்" (Battle of North) தொடக்க வீரராக இவர் நிகழ்த்திய சாதனை இன்றளவும் முறியடிக்கப் படமுடியாத இலக்காக உள்ளது. ஜாவேத் மியாண்டட் தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கு எதிராக இலங்கையின் வட மாகாண கிரிக்கெட் அணிக்காக அணியின் துணை கேப்டனாகவும் தொடக்க ஆட்டக்காரராகவும் விளையாடிய பெருமை பேராயருக்கு உண்டு.

**இறையியல் கல்விகள்**

பேராயரின் இறையியல் உருவாக்கம் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் தொடங்கியது. அவர் தனது இறையியல் மேற்படிப்பை அமெரிக்காவில் தொடர்ந்தார். திருமறை ஆய்வுகள் மற்றும் கிரேக்கத்தில் சிறந்து விளங்கினார். அவர் அமெரிக்க திருமறை சங்கத்தின் விருதினை 1991இல் வென்றவர். முதுநிலை மட்டத்தில் தேர்ச்சி பெற்றபோது "மேக்னா கம் லாட்" ('Magna Cum Laude') பெறுவதில் 4.0 of 4.0 of GPA மதிப்பெண் பெற்று அரிய சாதனையும் படைத்திட்டார். அவரது முனைவர் பட்ட ஆய்வு புதிய ஏற்பாட்டுத் துறை சார்ந்தது.

**இறைப்பணிகள்**

ஹாங் ஹாங்கைத் தலைமை இடமாக கொண்ட ஆசிய கிறிஸ்தவ மாமன்றத்தின் (CCA) இறையியல் கரிசனைத்துறையின் செயற்பாட்டு பொறுப்பாளராக ஐந்து ஆண்டுகள் செயல்பட்டு, ஆசிய நாடுகளின் முன்னேற்றத்திற்கு பெரும்பங்காற்றினார். பின்னர் கொழும்பில் உள்ள திருச்சபை பொறுப்பை ஆதீன அழைப்பிற்கு ஏற்ப ஏற்றுக் கொண்டார்.

**ஒன்றிப்பு இயக்க ஈடுபாடுகள்**

உலக ஒன்றிப்பு இயக்க முன்னோடியாகவும், இந்தநூற்றாண்டின் தலைசிறந்த இறையியலாளராகவும் அறியப்படும் பேராயர், ஒன்றிப்பு இயக்க செயல்பாடுகளில் பரந்த அனுபவம் கொண்டவர். ஒரு பங்கேற்பாளராக மட்டுமல்லாமல் ஒரு பேச்சாளராகவும் பலரின் திருப்பணி ஒப்படைப்பிற்கு வித்திட்டவர். ஜெனீவாவின் போஸே எனும் இடத்திலுள்ள உலக ஒன்றிப்பு இயக்க நிறுவனத்தில் விரிவுரைகளை வழங்குவதற்காக சிறப்பாக அழைக்கப் பட்டவர். பேச்சாளராகவும் திருவிவிலியத்தை எளிமையாக விளக்கும் அருளுரையாளராகவும், மகாநாடுகளை நடத்தும் தலைவராகவும் பல்வேறு மன்றங்களுக்கு உலகம் முழுவதும் பயணம் செய்தவர். இந்திய கிறிஸ்தவ மாமன்றம் (NCCI) அவரை வருடாந்திர கூட்டத்திற்கான திருமறை ஆய்வுகளை தலைமை தாங்க அழைத்துள்ளது.

2000 ஆம் ஆண்டு CSI மாநாட்டில் நடத்தப்பட்ட பேராயர் மைக்கேல் ஹோலிஸ் நினைவு கருத்தரங்கில் விரிவுரையாற்ற அழைக்கப்பட்ட ஒரே பேராயர் ஆவார். பேராயர் தற்போது இலங்கை தேசிய கிறிஸ்தவ மாமன்றத்தின் (NCC-SL) தலைவராக பணியாற்றுகிறார் அவர் தனது பேராயர் பதவிக்காலத்தில் இந்த பதவியை வகிப்பது இது இரண்டாவது முறையாகும். யாழ் கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவராகவும், உடுவில் பெண்கள் கல்லூரியின் ஆளுநர் சபையின் தலைவராகவும் பணியாற்றுகிறார். CSI சினாட் மாமன்றம் மூத்த பேராயர் எனும் அடிப்படையில், அவரது ஆலோசனையையும் ஞானத்தையும் நாடுவது வழக்கம்.

பேராயர் எப்போதும் தமிழ் சமூகத்தின் உரிமைகளுக்கும், கண்ணியத்திற்கும் குரல் கொடுக்கும் ஒரு சிறந்த பேச்சாளராக இருந்து வருகிறார். 1995 இன் மோசமான இரவில் 500,000 பேருடன், ஒரு தனிநபராக ஐ.நா அமர்வுகளுக்குச் சென்று இடம்பெயர்ந்த மக்களின் சார்பாக உரையாற்றும் தைரியம் எமது பேராயருக்கு இருந்தது.

இன்று நமது மதிப்பிற்குரிய பேராயர் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் பொருட்டு ஆதீன மக்களுடன் யாழ்ப்பாண பொது சமூகமும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இணைகிறது. பணிவான முறையில் தனது மேய்ப்புப் பணியைத் தொடங்கிய பேராயர் தற்போது குருத்துவ ஊழியத்தில் 40 ஆண்டிலும், பேராயர் பொறுப்பினில் 16 ஆண்டிலும் அடியெடுத்து வைக்கிறார்.

கடவுளின் ஆசீர்வாதம் எமது பேராயரோடும் அவர்தம் குடும்பத்தோடும் இருக்க வேண்டும் என கடவுளை நாம் பிரார்த்திப்போம். பேராயரின் உற்றத்துணையாக விளங்கும் கலாநிதி. தயாளினி தியாகராஜா ஒரு ஆற்றுப்படுத்துநர், சமூக ஆலோசகர், இப்போது நிறை வாழ்வு மையத்தின் (CHH) இயக்குநராக உள்ளார்.

இவர்களது ஒரே மகள் லிடியா கீதாஞ்சலி சர்வதேச படிப்பில் பட்டம் பெற்றவர், கனேடிய குடிவரவு அமைப்பில் பணிபுரிகிறார்.

வாழ்த்துவோர்:

**தென் இந்திய திருச்சபை மக்கள்**

(CP 38466) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பங்களை மேலும் அதிகரிக்கவா இராணுவச் சோதனைச் சாவடிகள்?

## மூத்த சட்டத்தரணி சிறிகாந்தா கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 9

பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் படுகின்ற துன்பங்கள் போதாதென்று, மக்களின் துயரங்களை மேலும் அதிகரிக்கவா யாழ்ப்பாணத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையையும் கடத்தலையும் தடுக்கும் நோக்குடன் பிரதான வீதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அன்றாட வாழ்கைக்கே அல்லாடிக் கொண்டிருக்கும் பொது மக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள் போதாது என்ற ரீதியிலா இந்த நடவடிக்கை என்றே கேட்கத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் உட்பட, தமிழ்ப் பிரதேசத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகள் , அநாவசியமான கெடுபிடிகளை ஏற்படுத்தி, உளவியல் ரீதியாக அச்சுறுத்தி நிற்கும், வெறுப்புக்குரிய ஒரு பொறிமுறையாகவே கடந்த காலத்தில் இருந்து வந்துள்ளன என்பதே அனுபவபூர்வமான உண்மையாகும். இந்தப் பின்னணியில், வடக்கின் ஆளுநர் இராணுவச் சோதனைச் சாவடிகளை ஏன் பரிந்துரைத்துள்ளார் என்பது புதிராக உள்ளது.

மிகவும் ஆட்சேபகரமான விடயமாக படைத்தரப்பினரால் தொடர்ந்து அணுகப்பட்டு வந்திருக்கும் மாவீரர் நினைவஞ்சலி வாரம் நெருங்கி வரும் சூழ்நிலையில், போதைப் பொருள் தடுப்பு என்ற பெயரால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை, நீறு பூத்த நெருப்பாக நீடிக்கும் தமிழ் மக்களின் நீண்டகால துயர நினைவுகளை உரசிப்பார்க்கும் ஓர் உளவியல் துன்புறுத்தலாக மட்டுமே அமைய முடியும் என்பதை தயக்கம் எதுவும் இன்றி சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்தச் சோதனைச் சாவடிகளில் சில சிற்றெறும்புகள் வேண்டுமானால் சிக்கலாம். ஆனால், சுண்டெலிகளும் பெருச்சாளிகளும் ஒருபோதும் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. கடலிலே கடற்படையிடம் போதைப்பொருள் மீன்கள் சிக்குவதுபோல, தரையில் நிகழப் போவதில்லை. இந்தச் சூழ்நிலையில், அர்த்தமற்ற இந்தத் திட்டத்தை கைவிடுமாறு வடமாகாண ஆளுநரை நாம் கோருகின்றோம்.

அதேவேளையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் விஸ்வரூபம் எடுக்க முனையும் போதைப் பொருள் பிரச்சினைக்கு முடிவு கட்ட அறிவார்ந்த ரீதியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்படுவது அவசியமானது என்றும் நாம் தெரிவிக்க விரும்புகின்றோம். சமூகத்தின் சகல தரப்பினரையும் போதைப் பொருள்களுக்கு எதிரான போராட்டம் ஒன்றில் உத்வேகத்தோடு ஈடுபடுத்தும் திட்டமொன்று தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் ஆகும்.

சமூகத்துறை, நிர்வாகத்துறை, பொலிஸ் துறை உட்பட படைத்தரப்பு மற்றும் சட்டத்துறை, நீதித்துறையோடு, சமயத்துறையையும் உள்ளடக்கிய ஒரு பரந்த திட்டம் வகுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே, சமூகத்தின் சகல பிரிவினரின் பூரண ஒத்துழைப்பை பெற்று இந்தப் போராட்டத்தில் வெற்றிபெற முடியும் - என்றுள்ளது.

(அ-ம-26)


## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் அபிவிருத்தி அலுவலகராக கடமையாற்றும் **திருமதி தர்மபாலன் ரஜனி** அவர்களின் அன்புத் தாயார் **திருமதி**

**நவரட்ணம் கனகம்மா**

அவர்கள் 06.11.2022 அன்று மறைந்து விட்டார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 22.04.1940 | மறைவு 06.11.2022

மாவட்ட அலுவலகம்
கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

உதவிப்பணிப்பாளரும் பணியாளர்களும்

## கண்ணீர் அஞ்சலி



எமது வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் சமூக சேவைக்கு நீண்டபலகாலமாக குடும்பமாக உதவி புரிந்து வரும் கொக்குவிலைச் சேர்ந்த அமரர் **சேவியார் சிவானந்தன்** அவர்களின் மூத்த புதல்வி

**கலாமதி சிவபாலசூரியன்**

அவர்கள் 02.11.2022 லண்டனில் காலமாகிவிட்டார்.

அவருக்கு எமது கழகம் சார்பில் கண்ணீர் அஞ்சலியினை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக்கழகமும்**
**வளர்மதி நிறைவாழ்வகமும்.**

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

## புதிய ஆரம்பம் ....

### நொதேண் சென்றல் வைத்தியசாலையின் தாதிய பயிற்சிநெறி

நொதேண் சென்றல் வைத்தியசாலையில் தாதியர்களுக்கான புதிய பயிற்சிப்பாடநெறிகள் ஆரம்பமாகவுள்ளது. தாதியப்பயிற்சி நெறியில் ஆர்வமுள்ளவர்கள் இம்மாத இறுதிக்குள் தங்களது பெயரை நொதேண் சென்றல் வைத்தியசாலையில் மனிதவளப் பகுதியில் (HR) நேரில் வந்து பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிச்சான்றிதழ் வழங்கப் படுவதுடன் நொதேண் சென்றல் வைத்தியசாலையிலேயே வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான அதிக சந்தர்ப்பமும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகைமைகள்**

01. க.பொ.த சாதாரண பரீட்சையில் கணித பாடத்திலும் விஞ்ஞானப் பாடத்திலும் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

02. யாழ். மாவட்ட எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே உள் ஈர்க்கப்படவுள்ளதால் பதிவுகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு

**நொதேண் சென்றல் வைத்தியசாலை**

021 721 7217

northernhrm@gmail.com

(CR 38470)(3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1940



மறைவு 06 . 11 . 2022

**திரு.Dr.அன்ரன் சந்தியாப்பிள்ளை**

**( Doctor Anton)**

இல.40. பழைய பூங்கா வீதி சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.Dr.அன்ரன் சந்தியாப்பிள்ளை கடந்த 06.11.2022 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கபிறியல்பிள்ளை ரோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரோகினி அவர்களின் அன்புக் கணவரும், ஜூட் சேவியர் (கனடா), லக்ஷாயினி (ஜேர்மனி), கிருஷாந்தி (ஜேர்மனி), றோஜி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற லூர்தம்மா அவர்களின் அன்புச் சகோதரரும், கவிதா, கிருஷாந்த், ராஜன், றேகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஷ்மியா, தனுஷ்மியா, ஷர்மி, டெனிக்கா, ஜெஃப்றி, கெவின், ஷன்டல், ஷருன், ரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07.11.2022 முதல் 11.11.2022 வெள்ளிக்கிழமை வரை இல.40, பழைய பூங்காவீதி, சுண்டுக்குளி எனும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு 11.11.2022 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்திற்கு திருப்பலிக்காக கொண்டு செல்லப்பட்டு தொடர்ந்து யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்.**

**0212212841**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களுக்காக ஓர் ஆய்வரங்கு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 1979ஆம் ஆண்டில் கல்விசார் சுயதீர்மானம் எடுக்கும் வல்லமைமிக்க முழுமையான தனித்த ஒரு பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது.
இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அப்போது மனிதப்பண்பியல் பீடமாகவிருந்த கலைப்பீடம் அதிகம் பங்களிப்புச் செய்திருந்தது. இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் கலைத்துறை குறிப்பாக சமூகவிஞ்ஞானம் மற்றும் மனிதப்பண்பியல் கற்கைப் புலங்கள் தமக்கான முக்கியத்துவத்தினைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.
இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி குறித்து சிந்தித்த இலங்கைக் கல்விமான்கள் தேசிய அடையாளம், பண்பாடு மற்றும் மரபுத் தொடர்ச்சிகள் குறித்து அதிகம் அக்கறை எடுத்திருந்த காரணத்தினால், இலங்கையில் விஞ்ஞானம் சார் கற்கைகள் வளர்ச்சியடைந்தமைக்கு மேலாகக் கலைத்துறை சார்ந்த சமூகவிஞ்ஞானம் மற்றும் மனிதப்பண்பியல் கற்கைகள் அதிகம் வளர்ச்சியுற்றன. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் பதினெட்டுத் துறைகளைத் தன்னகத்தே கொண்ட மிகப்பெரியளவிலானதொரு பீடமாக உருவெடுத்துள்ளது.

**பல்கலைகளும் மாநாடுகளும்**

பல்கலைக்கழகங்களின் பிரதான பணிகளான கற்பித்தல், ஆராய்ச்சி, கலாசாரம் மற்றும் பண்பாடு ஊடான அறிவுப் பரவலாக்கம் செய்தல் மற்றும் சமூக ஒன்றிணைவு என்னும் விடயங்களை எய்தும் அல்லது வழங்கும் முதன்மைத் தளமாகவிருப்பவை பல்கலைக் கழகங்களால் முன்னெடுக்கப்படும் ஆய்வுமாநாடுகள் ஆகும். ஆய்வு மாநாடுகள் பல்வேறு மட்டங்களில் பல்வேறு இலக்குகள் மற்றும் பங்குபற்றுனர்களை உள்ளடக்கி காலத்தின் தேவைகருதிய கருப்பொருள்களில் சர்வதேச ரீதியாகவும் உள்ளூர் ரீதியாகவும் நடத்தப்படுகின்றன. இவற்றுள் பல்கலைக்கழக மாணவர்களை மட்டும் முழுமையாக ஆய்வாளர்களாகக் கொண்டு நடத்தப்படும் ஆய்வு மாநாடுகள் பல வகைகளிலும் முக்கியத்துவம்மிக்கன.
அந்தவகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் 'ஏ ஹெட்' செயற்றிட்டத்தின் நிதி அனுசரணையுடன் இவ்வாண்டுக்கான இளங்கலை மாணவர்களுக்கான இரண்டாவது ஆய்வரங்கினை ஒழுங்கமைப்புச் செய்துள்ளது.
இதன் முதலாவது மாநாடு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி 'சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மனிதப்பண்பியலும் சமூக விஞ்ஞானங்களும் எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனுடைய நீட்சியாக இந்த ஆய்வரங்கானது, 'பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளிடையே வழமைக்குத் திரும்புதலும் மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புதலும்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரையினை நிகழ்த்திய பின்னர் திறப்புரையினை கொழும்புப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் 'இலங்கையின் தற்போதய பொருளாதார நெருக்கடி' எனும் கருப்பொருளில் உரையாற்றவுள்ளார்.

**8 ஆய்வுத் தளங்களில் 125 ஆய்வுக் கட்டுரைகள்**

இவ் ஆய்வு மாநாட்டுக்கென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களிடமிருந்து தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலமைந்த ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டு, அவற்றிலிருந்து 125 ஆய்வுக்கட்டுரைகள் மாநாட்டுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட குறித்த எட்டு ஆய்வுத் தளங்களில் ஆய்வாளர்களால் அளிக்கைசெய்யப்படவுள்ளன.
இந்த ஆய்வுத் தளங்களை துறைசார் பேராசிரியர்கள் தலைமையேற்று நடத்தவுள்ளனர்.
இந்த மாநாட்டில் அளிக்கை செய்யப்படும் ஆய்வுக் கட்டுரைகள் வரலாறு மற்றும் பண்பாட்டு மேம்பாடு, அனர்த்த முகாமைத்துவம், தொல்லியல் மற்றும் பண்பாட்டு பல்வகைமை, உணவும் போஷாக்கும், வறுமை மற்றும் உணவுப்பாதுகாப்பின்மை, மனித உரிமைசார் பிரச்சினைகள், ஊடகமும் சமூகமும், ஒழுக்கவியலும் மானிட வாழ்வும், மொழி, இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு, பால்நிலையும் மேம்பாடும், இனத்துவமும் மோதல் தீர்வும், சுகாதாரமும் நல்வாழ்வும், சமூகபொருளாதார சமத்துவமின்மையும் நீதியும், நல்லிணக்கமும் நிலைமாறு கால நீதியும், பொருளாதார நெருக்கடியும் இலங்கைச் சமூகமும், சட்டமும் ஒழுங்கும், சமகால சமூகத்தில் சமயம், கொவிட்-19 பெருந்தொற்றும் இலங்கைச் சமூகமும், வேறுபட்ட பண்பாடுகளில் அழகியல், சமூகமாற்றமும் சமகால சமூக பிரச்சினைகளும், சமுதாய தாங்குதிறன், சமுதாய மேம்பாடும் பிராந்தியத் திட்டமிடலும், கல்வியும் சமூகமும் மற்றும் காலநிலை மாற்றமும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளும் எனப் பல்வேறு உப தலைப்புக்களை அடியொற்றி அமைந்துள்ளன.

# போதைக்கு எதிரான வாசிப்பின் மகத்துவம்

## பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டும் ஆற்றுகை

- ஜோ. ஜெஸ்ரின் -




நூல்களை வாசிப்பதால் மாணவர்கள் உயர் நிலையடைந்து சமூகப் பிறழ்வுகளுக்கு காரணமான போதையின் பாதையிலிருந்து இளம் சமூகத்தை விழிப்பூட்டும் நோக்கில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் பொதுசன நூலகத்தால் நூலக நடமாடும் சேவை மற்றும் விழிப்புணர்வு ஆற்றுகை ஒன்றை கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நூலகப் பணியாளர் ஜோ.ஜெஸ்ரின் எழுதி நெறியாக்கம் செய்துள்ள "போதைக்கு எதிரான வாசிப்பின் மகத்துவம்" எனும் விழிப்புணர்வு நாடகமானது நூலகப் பணியாளர்கள் 10 பேரை நடிகர்களாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.
அந்தவகையில் கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோண்டாவில் இந்துக்கல்லூரியிலும் 8 ஆம் திகதி கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்திலும் நடைபெற்றது. அத்துடன் இன்று புதன்கிழமை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியிலும் நாளை வியாழக்கிழமை அராலி இந்துக்கல்லூரியிலும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும் அராலி வள்ளியம்மை வித்தியாலயத்திலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் 16 ஆம் திகதி புதன்கிழமை நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்திலும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா பொதுநூலகத்திலும் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.
யாழ்.மாநகரசபையின் விசேட அனுமதியுடன் பொதுசன நூலகத்தால் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வுத் திட்டம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகளின் பிரகாரம் கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து யாழ். கதீஜா வித்தியாலயம், நல்லூர் பிரதேசசபை நூலகம், வேலணை மத்திய கல்லூரி, மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி, எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கைதடி பொது நூலகம், கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கச்சாய் பொதுநூலகம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், ஆவரங்கால் நடராச ராமலிங்கம் வித்தியாலயம், ஊரெழு கணேச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 - 10 - 1934



மறைவு
21 - 10 - 2021

## அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி (JP)

(சாவகச்சேரி, முழங்காவில்) **திதி : 09.11.2022**

**நம் சிந்தையில் என்றும் எந்தை.....**

எந்தையின் உடல் உருவம் மறைந்து ஆண்டொன்று ஆனதுவோ!
நம்சிந்தையில் என்றும் மீண்டு வரும் தந்தையின் நீங்காத நினைவுகள்.
குடும்பத்தின் ஒளி விளக்காக. சமூகத்தின் பகல் விளக்காக.
தர்மத்தின் வழியில் நின்று திசைகாட்டி மறைந்த தந்தை.
அப்பாவின் கண்டிப்பான வார்த்தைகள் எம்மை நல்வழியில் நடத்திய போதனைகள்.
வேதனைகளை வெளிக்காட்டாது. பிள்ளைகள் சாதனை புரிய
வேண்டி சோதனைகளை தாங்கிய குடும்ப போராளி.
பாசத்தையும் கோபத்தையும் ஒரே நேரத்தில் காட்டி நடிக்க தெரியாத எமது குடும்ப நாயகன்.
தன்னலம் கருதாது சமூக சேவையிலும்.
அநீதிகளை சுட்டிக்காட்டி சமாதான சகவாழ்வுக்கும்.
சமூக பணியாற்றிய தன்னார்வ தொண்டர்.
குடும்பத்துக்கும் தான் வாழ்ந்த சமூகத்துக்கும் தன்னை அர்ப்பணித்த
நம் தந்தை நெஞ்சில் நாளும் வாழும் தெய்வம்.


**என்றும் உங்கள் நினைவில் வாழும்**

**பொன்ராசு குடும்பத்தின் மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(CS21615) (3/6)

# பதினெட்டாம் ஆண்டு நினைவேந்தல்

தாய் மடியில்
25 - 06 - 1946



இறை அடியில்
27 - 10 - 2004

## அமரர் சுப்பிரமணியம் செல்வராசா

(உரிமையாளர் – வாணி ரெக்ஸ் – சாவகச்சேரி)


**திதி : பூரணை**

ஆண்டுகள் பதினெட்டு உருண்டோடி நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவுகள்....
மனதின் வலியை உணர்த்த வார்த்தை வரவில்லை
வலியின் குரலாய் ஒலிக்கிறது ஓயாத கண்ணீர்....
வாழ்கின்ற பொழுதெல்லாம் உங்கள் நினைவுகள்
உயிரிலே கலந்து அழியாத ஓவியமாய் நிலைக்கிறது.....
உடல் வருத்தம் பாராத உண்மை உழைப்பின் உதாரணம் நீவிர்
உயரத்தில் நீங்களிருந்தாலும். உயிருள்ள வரை உம் நினைவில் நாங்கள்....

**தங்கள் ஆத்மா இறைபாதம் அடைய பிரார்த்திக்கும்**
**குடும்பத்தினர்**
**கென்ஸ்மன் லேன், டச்சுவீதி, சாவகச்சேரி.**

(CR 38465) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நீலிப்பந்தனை, காரைநகரைப்
பிறப்பிடமாகவும் மாப்பாணவூரி. காரைநகரை
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் நல்லதம்பி விஜயதர்மா கேதீஸ்வரதாசன்

(இளைப்பாறிய தபால் அதிபர்,
முன்னாள் தவிசாளர், காரைநகர் பிரதேச சபை)

**அப்பா உங்களைப் பிரிந்து ஒரு ஆண்டு கடந்து விட்டது**
**என்றும் உங்கள் இனிமையான நினைவுகளுடன் நாம்....**

எங்கள் அப்பாவின் மறைவின்போது சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.


மலர்வு 20.02.1942
உதிர்வு 21.10.2021

**திதி: 09.11.2022**

**மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரி.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
கணக்காய்வாளரின் பாசமிகு கணவர்

## தர்மலிங்கம் தெய்வேந்திரம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**Maithily Nagai maadam (PVT) Ltd.**
**89.V Kasthuriyar Road, Jaffna.**
**Yarl Maithily**
**79Z, Sea street, Colombo -11**
**உரிமையாளரும்**
**பணியாளர்களும்** (CR 38475) (3/6)

# காரைநகர் அபிவிருத்திச்சபையின் புதிய யாப்பு நிறைவேற்றமும் நடைமுறைப்படுத்தலும்

02.10.2022 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் பொதுச்சபை தீர்மானத்தின்படி புதிய யாப்பு குழுவினால் தயாரிக்கப்பட்ட புதிய யாப்பு ஆனது 06.11.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்களுடன் ஏகமனதாக பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்டது. இப்புதிய யாப்பு ஆனது 06.11.2022 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பொதுச்சபையின் தீர்மானத்தின்படி

**தொ.பே.இல: 021 221 1757**
**07.11.2022**

**செயலாளர்**
**காரைநகர் அபிவிருத்தி சபை**
**மணற்காடு, காரைநகர்.**
(CS 216692) (3/6)

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் புவேந்திரா இராஜக்கோன்

(அரசாங்க மருந்தாளர்)

மலர்வு 01.09.1941
உதிர்வு 09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்

**குடும்பத்தினர்.**
**தபாற்கந்தோர் முன்பாக**
**ஏழாலை வடக்கு, ஏழாலை.**
(CS 21681) (3/6)

# விண்ணக வாழ்வின் 31ஆம் நாள்

**09.11.2022 (புதன்)**



அமரர்

## யூலியட் வசந்தாதேவி மனோகரதாசன்

(ஓய்வு நிலை ஆசிரியை)

மண்ணில் 18.05.1951
மகிமைக்குள் 10.10.2022

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி ஊடாக எமது துயரில் பங்கு பற்றி இறுதி ஆராதனையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.


**நவாலி தெற்கு**
**மானிப்பாய்.**
(CS 21670) (3/6)

**குடும்பத்தினர்**
**021 225 5059**

# இதய அஞ்சலிகள்

## மாறாப் புன்னகை மைந்தன் தெய்வேந்திரம்!

## அமரர் தர்மலிங்கம் தெய்வேந்திரம் (மண்கும்பான்)



பிறப்பு
**29.11.1958**

இறப்பு
**05.11.2022**

மந்திரம் போல்
ஊருக்குள் அனைவரும்
அடிக்கடி உச்சரிக்கும் ஒரே பெயர்
தெய்வேந்திரம்!

உதவி என்று யார் கேட்டாலும்
உடனே வரும் முதல் மனிதன்
தெய்வேந்திரம் தான்!
தனக்குப் பிடித்த மாதிரி
தானே வாழ முடியாத உலகில்
பிறருக்கும் பிடித்த மாதிரி வாழ - அது
தெய்வேந்திரத்தால் தான் முடிந்தது.
சிலருக்குச் சிலரைப் பிடிக்கும்.
பலருக்குப் பிடிக்காமலும் இருக்கும்.
ஆனாலும் எல்லோருக்கும்
பிரியமானவன் தெய்வேந்திரம்

ஆலய வேலை என்றால் - முதல்
ஆளாய் வரும் தெய்வேந்திரம்
யார் எவரையும் பாராது
தானே தனிய நின்று முறிவதுண்டு.
முருகன் பிள்ளையார் கோயில் கருமங்களில்
முன் நிற்கும் ஒருவன் இன்று
காலன் அழைத்துப் போய்விட்டான்!
நித்திய பூசை. விழாக்கள் என
முருகன் பிள்ளையார் கோயில்களில்
சத்தியம் செய்து விட்டவன் மாதிரி
சுழன்று நின்றெரிந்த கறுத்தச் சூரியன்
நித்திய உறக்கத்தில் இன்று!
கை கால்களைக் கட்டிப் போட்ட மாதிரி
கலங்கித் தவித்து நிற்கிறது ஊர் உறவு!!
மெய்வருந்தி உழைத்த உத்தமன்
கை விரித்த படி போகின்றான் நாம்
கண்ணீர் மல்க!
போய் வா புண்ணியனே உனை மறவோம்!

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

பிரிவினால் துயருறும்

**பாலவிநாயகர் மோட்டோர்ஸ்**
**46A, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**புதிய நதியா நகைமாடம்**
**73, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கந்தவேலன் றேடர்ஸ்**
**110, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

கவிப்புலவர்
வேலணையூர் சுரேஸ்

(CS 21693) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தனுக்கு...

கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான இரா.சம்பந்தனுக்கு நாடாளுமன்றத்தில் மூன்று மாதங்கள் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு அமைவா கவே அவருக்கு இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள் ளது.

(அ-ம-22)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 • 02 • 1948

உதிர்வு 20 • 10 • 2021

**அமரர் திருமதி பத்திநாதன் சந்திராதேவி**

**அம்மா..!**

எமது மூலமந்திரம்
நாம் வழிபடும் கோயிலின் கர்ப்பகிரகம்
அன்று முதல் இன்று வரை
எமைத்தாங்கி நின்ற அத்திவாரம்
உண்மை, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு
அளவற்ற இறைபக்தி போன்ற உன்னத பண்புகளை
தன்னுள் அடக்கிய பொக்கிஷம்
எம் வாழ்வின் உயர்விற்காய் உங்களையே
உரமாக்கிய ஒப்பற்றவர் நீங்கள்
உங்கள் வாழ்க்கைப் பயணம் இன்னும்
பல ஆண்டுகள் எம்மோடு இணைந்திருக்கும்
என்ற எம் எண்ணம் பொய்யாகித்தான் போனது
வானுலகில் இருந்தாலும் எமை அருகிருந்து
காப்பீர்கள் எனும்நம்பிக்கை
இன்னும் உள்ளது எம் உள்ளத்தில்
நீங்காது அம்மா உங்கள் நினைவுகள்
இவ்வுலகில் நாமிருக்கும் வரை.

ஈரவிழிகளுடன் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**“தணிகை” அல்வாய் வடக்கு, அல்வாய்.**

(CS 21677) (3/6)

## வாடகைக்கு

திருநெல்வேலியில் அனெக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு. அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு மட்டும்.

(CS 21690) (3/6)

**தொடர்பு : 077 112 0314**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் • 12 • 07 • 1940

மறைவு • 21 • 10 • 2021

## அமரர் சங்கரப்பிள்ளை கமலாட்சி

**திதி: பிரதமை**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய கைதடி
வீரகத்திப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி

குடும்பத்தினர்.


## 80 கிலோ...

மீட்கப்பட்டுள் ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையி னர் ஆகியோரின் சிறப்புச் சுற்றிவளைப்பு நடவடிக்கை யின்போதே மேற்படி கஞ்சா மூடைகள் கைப்பற்றப்பட் டுள்ளன. எனி னும் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்பட வில்லை. இது தொடர்பில் மேலதிக விசார ணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ-ம-20-26-27)



# மரண அறிவித்தல்



மலர்வு 26 - 03 - 1940

உதிர்வு 06 - 11 - 2022

## திருமதி கந்தசாமி தனலட்சுமி

மாவிட்டபுரம் பளை தெல்லிப்பளையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி தனலட்சுமி கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை கந்தசாமியின் அன்பு மனைவியும், ஆறுமுகம் விசாலாட்சி தம்பதிகளின் பாசமிகு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி யளவில் மருதனார்மடம் பாடசாலை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள்

077 771 4470

(CS 21689) (3/6)

### கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்

## 1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள 1AB, 1C பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தி யோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 2022.11.22 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நிபந்தனைகள்**

01. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2 ஐச் சேர்ந்தவர்களில் தெரிவு மேற்கொள்ளப்படும்.
02. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் (1AB, 1C) அதிபராக 03 வருட காலம் சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
03. மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இல 2022/01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு, சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

**விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்**

| இல | வலயக் கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | தீவகம் | யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் | 1C |
| 02 | வலிகாமம் | யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் | 1C |
| 03 | தென்மராட்சி | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 1AB |
| 04 | கிளிநொச்சி வடக்கு | கிளி/பளை மத்திய கல்லூரி | 1AB |
| 05 | | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை | 1C |

2022.11.09

(CR 38469)(3/6)

**இ.வரதீஸ்வரன்**
**செயலாளர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்...

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போதே மேற்படி நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்த சுற்றிவளைப்பின்போது, வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், உயிர்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோய்ன் பொதிகள், 20 லீற்றர் கசிப்பு, ஊசி மருந்துகள், வில்லைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. கைதான சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-113)

## போதைக்கு...

பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வடமாகாணத்தில் போதைப்பொருளுக்கு எதிரானசெயற்றிட்டங்கள் தீவிரமானதை அடுத்து, போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள்வதற்காக மறுவாழ்வு மையத்துக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெற்றோர் போதைக்கு அடிமையான தமது பிள்ளைகளை தாமாக முன்வந்து மறுவாழ்வு மையத்தில் சேர்த்து வருகின்றனர். இந்த நிலையில், தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தாயொருவர் தனது மகனை போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தில் சேர்த்து மறுவாழ்வளித்து போதைப் பொருள் பாவனையில் இருந்து மீட்டுத் தருமாறுகோரி பொலிஸாரிடம் நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளார். பொலிஸாரும் இந்த விடயம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-113)

## தமிழ்...

இராஜதந்திரத் தொடர்புகளை ஆரம்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடலில் மூழ்கும் நிலையில் இருந்த படகொன்றில் இருந்து புலம்பெயர்ந்தோர் என சந்தேகிக்கப்படும் சுமார் 300 பேர் சிங்கப்பூர் கடற்படையினரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டனர். படகில் இருந்த இலங்கைப் பிரஜை ஒருவர், இலங்கை கடற்படையினரைத் தொடர்பு கொண்டு, தாங்கள் ஆபத்தில் இருப்பதாகவும், கொழும்பில் உள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சிங்கப்பூர், வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடியதை அடுத்தே அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறுமீட்கப்பட்டவர்கள்வியட்நாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள நிலையிலேயே அவர்களை இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அலி சப்ரி தெரிவித்துள்ளார். (அ-ம)

## குழந்தையைத்...

அதிகாரிகளிடத்தில் அசமந்தப்போக்கே நிலவுவதாகத் தெரியவருகின்றது.

குறித்த 4 வயதுக் குழந்தை அவரது தாயார் நிறஞ்சினியுடன் (வயது-24) வசித்து வந்துள்ளது. வாய்பேச இயலாதவரான குறித்த இளம்தாய் 3 வருடங்களுக்கு மேல் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில், அண்மையில் அவரும் குழந்தையும் குறித்த கணவனால் மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் குறித்த தாயாரின் (நிறஞ்சனியின்) ஒளிப்படம் பொறிக்கப்பட்டு கண்ணீர் அஞ்சலி ஒன்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது. இதையடுத்தே, அந்த இளம் தாயாருக்கு (நிறஞ்சனிக்கு) என்ன நடந்தது என்பதை அறியவும், குழந்தைக்கு இடம்பெறும் சித்திரவதைகளைத் தடுக்கும் முகமாகவும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் சிறுமியின் அம்மம்மா நேற்று முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபொழுது. 'இதுவரை அவ்வாறான முறைப்பாடுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை' என்று தெரிவித்தார்.

இதனையடுத்து யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தொடர்புகொண்டு கேட்டபொழுது, 'எம்மிடத்தில் இதுவரை இவ்வாறான சம்பவம் எதுவும் பதிவாகவில்லை' என்று தெரிவித்தார்.

இதனையடுத்து யாழ். மாவட்டச் செயலரிடம் தொடர்புகொண்டு கேட்டபொழுது, 'இந்த விடயம் தொடர்பில் எம்மிடம் முறையிடப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. நல்லூர் பிரதேச செயலரைத் தொடர்புகொள்ளுங்கள்' என்று தெரிவித்தார்.

இதனையடுத்து நல்லூர் பிரதேச செயலரிடம் தொடர்புகொண்டு கேட்ட பொழுது, 'பிரதேச செயலகத்தின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்' என்று தெரிவித்தார். எனினும், எந்தவொரு அதிகாரிகளும் குறித்த விடயம் தொடர்பிலோ அல்லது குறித்த குழந்தையின் தற்போதைய நிலை தொடர்பிலோ சரியான தகவலை வழங்கவில்லை. (அ-ம-125)

## இந்துக்...

ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த 6ஆம் திகதி முதல் அடுத்த மூன்று வருட காலத்துக்குச் செயற்படும் வகையில் அவர் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## காலநிலைச்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு, கார்பன் வெளியேற்றத்தை மோசமாக மேற்கொள்ளும் வளர்ச்சியடைந்த நாடுகள் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்று எகிப்தில் இடம்பெற்று வருகின்றது. இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டுள்ளார். பல்வேறு உலகத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டுள்ளனர். இந்த மாநாட்டில் நேற்று உரையாற்றுகையிலேயே ரணில் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அபிவிருத்தியடைந்த நாடுகளின் கட்டுப்பாடற்ற தொழில்மயமாதலே காலநிலை மாற்றத்துக்கான அடிப்படைக் காரணம். இதன் விளைவுகளையே வறிய நாடுகள் அனுபவிக்க நேரிட்டுள்ளது. இதன் விளைவாக, வறிய நாடுகள் தங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்கப் போராடும் அதேவேளையில் பொருளாதார ரீதியாக முன்னேறவும் போராடுவதால், இந்த நாடுகள் இரட்டை ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. எனவே, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் வகையில் தமது நிதியை இரட்டிப்பாக்குவதன் மூலம் அபிவிருத்தியடைந்த நாடுகள் கிளாஸ்கோவில் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவேண்டும்.

காலநிலை தொடர்பான பாதிப்புக்களை அடையாளப்படுத்தும் பேரவையால் முன்மொழியப்பட்டதற்கமைய, எதிர்கால சவால்களுக்கு பதில் வழங்கக்கூடியவாறு சர்வதேச விழிப்புணர்வை வலுப்படுத்தும் வகையில் ஒரு விசேட அறிக்கையை உருவாக்குவது தற்காலத்தில் பொருத்தமானதாக இருக்கும்.

நிறைவான உயிர்ப் பல்வகைமையைக் கொண்டுள்ள இலங்கை, காலநிலை மாற்றத்தின் சவால்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் கார்பன் வெளியேற்றத்தை 14.5 சதவீதமாகக் குறைக்கும் செயன்முறையை இலங்கை ஆரம்பித்துள்ளது. கடல் சார்ந்த பிரதேசங்களில் திட்டமிடலை ஆரம்பித்துள்ளதோடு காலநிலை அலுவலகம் ஒன்றை இலங்கை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்தது.

இருந்தாலும், காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பரந்த அளவிலான நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும். காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் ஆற்றலின்மை மிகப்பெரிய தடையாக உள்ளது. எனவே ஆற்றல்களை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். இந்தப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்காக நாம், பல்கலைக்கழக மாதிரியில் உலகின் முதலாவது சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை இலங்கையில் நிறுவவேண்டும்.

அதன் துணை நிறுவனம் மாலைதீவில் அமைக்கப்படவேண்டும். இந்தப் பல்கலைக்கழகமானது, விஞ்ஞானிகள், சூழலியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்போர், அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவோர் மற்றும் உலகின் அனைத்து நாடுகளையும் சேர்ந்த மாணவர்களுக்கும் தமது எல்லைகளைத் தாண்டி கற்கைகளை மேற்கொள்ளும் உலகளாவிய மையமாகச் செயற்படும்.

உத்தேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகமானது காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் மற்றும் அதனுடன் ஒத்திசைவாக்கும் ஆற்றல்களை உருவாக்கும் வகையிலான குறுகிய கால கற்கை நெறிகள் மற்றும் பட்ட பின்படிப்புக்களை தொடரும் வாய்ப்புகளை வழங்கும் - என்றார். (அ-ம)

## காணாமற்போனோர்...

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த அரசாங்கத்தின் இறுதி காலத்தில் நான்தான் இந்த விடயம் தொடர்பான அமைச்சர். ஆகவே எனக்கு, இந்த காணாமற்போனோர் காரியாலயம் பற்றி நன்கு தெரியும். காணாமற்போனோர் தொடர்பான காரியாலய தவிசாளர், இந்நாட்டில் யாரும் காணாமற்போகவில்லை என்று கூறுகிறார். உங்களுக்கு அதுபற்றித் தெரிந்திருக்க வேண்டும். யாரும் காணாமற்போகவில்லை என்றால் இந்தக் காரியாலயம் எதற்கு? சபாநாயகரே, இந்தக் காரியாலயம் பற்றிய சட்டவரைவு மிகவும் கஷ்டப்பட்டு நாம் இந்த சபையில் கொண்டு வந்து சட்டமாக்கினோம். இப்போது அரசு தரப்பில் இருக்கும் கூட்டம்தான் இதற்கு அன்று எதிர்ப்புத் தெரிவித்தது. இப்போது எதிரணியில் உள்ள நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறோம். அந்தக்காலத்தில் நீங்கள் எம்மை வேலைசெய்யவிடவில்லை.

1988, 1989 ஆண்டு காலத்திலும், 2000ஆம் ஆண்டுகளிலும் இந்த நாட்டில் பலர் காணாமற்போனார்கள். வடக்கில், கிழக்கில், தெற்கில், மேற்கில் என்று எல்லா இடங்களிலும் காணாமற்போனார்கள். இது நாடு முழுக்க நடந்தது. இந்த சாபத்தை, பாவத்தை முழுக்கவும் துடைத்து எறிவோம். அதனால்தான் இந்தக் காரியாலயத்தை நாம் அமைத்தோம். நீங்கள் எதிரணியில் இருந்து எமக்குத் தராத ஒத்துழைப்பை நாம் இப்போது இங்கிருந்து உங்களுக்குத் தருகிறோம். ஆனால், அந்த தவிசாளரை மாற்றுங்கள். அவரது கூற்றுக்கு இன்று கூட்டமைப்பும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்திருக்கவேண்டும். அவர்கள் நல்லெண்ணம் காரணமாக ஆர்ப்பாட்டம் செய்யவில்லை போலும் - என்றார். (அ-ம)

## கடன்...

நிதி இராஜாங்க அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை வலுப்படுத்தி இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க சீனா தயாராகவே உள்ளது. இதற்கிணங்க, இலங்கையை ஒருபோதும் தனிமையில் விடமாட்டோம். நெருக்கடி நிலையிலிருந்து இலங்கையை மீட்பதற்கு தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் - என்று சீனத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## மாணவன்...

மாணவன் ஒருவன் அடித்துக் கொல்லப்பட்டுள்ளான். சிவபாலன் கிஷாந் (வயது-13) என்ற மாணவனே இவ்வாறு அடித்துக் கொல்லப்பட்டவனாவான்.

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலையொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஒரே வகுப்பில் மாணவர்கள் இருவரும் பயில்கின்றனர். நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முடிவடைகின்ற நேரத்தில் உயிரிழந்த மாணவன் வகுப்பறை மேசையில் வர்ணப்பூச்சினால் வரைந்துள்ளான்.

சகமாணவனின் கை அந்த வர்ணப்பூச்சில் பட்டதுடன் வரையப்பட்ட பூச்சு அழிந்துவிட்டது. இதனையடுத்தே இருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதில் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தலால் தலையில் தாக்கப்பட்ட மாணவனின் வாயில் நுரை தள்ளியுள்ளது. இதையடுத்து குறித்த மாணவன் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும் உயிரிழந்துவிட்டான் என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர். மாணவனை தாக்கிய சக மாணவனும்சிகிச்சைக்காகதிருக்கோவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். (அ-ம)

## வெட்டுக்காயங்களுடன்...

சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜேந்திரன் குழப்பவாதி விக்னேஸ்வரன் நல்லவர்

## விஜதாஸ வழங்கினார் சான்றிதழ்

கொழும்பு, நவ.9

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் நல்லவர். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந் திரன் குழப்பவாதி. இதை நான் வடக்கில் நேரில் கண்டேன்.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது வடக்கில் கடந்த வாரம் நடமாடும் சேவைகளை நடத்தினோம். இலங்கையிலிருந்து இந்தியா சென்று, மீண்டும் நாட்டுக்குத் திரும்பியுள்ள மக்களுக்காக நாம் இந்தச் சேவையை நடத்தினோம். மக்களின் நன்மை கருதியே நாம் இவற்றைச் செய்தோம். ஆனாலும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளிட்ட சிலர் அதைக் குழப்புவதற்கு முயற்சி செய்தனர். அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் என்னுடன் கலந்துரையாடி ஒத்துழைப்பை வழங்கினார். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (எ-22)

# விஞ்ஞான ஆய்வுகூடம் திறப்பு நிகழ்வு

யாழ்., நவ. 9

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் கு.விமலன் தலைமையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக இந்த ஆய்வு கூடம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன், பாடசாலை பழைய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)


## விற்பனைக்கு

Alto (K10) 2015
2nd Owner
80000 Km Used Automatic
0770450708

## வேலையாட்கள் தேவை

யாழ்.கொழும்பு சேவையில் ஈடுபடும் அதிசொகுசு பேருந்திற்கு நடத்துனர்கள் உடன் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
076 00 94946

## DHL துரித கடிதங்கள் பொதிகள் சேவை



▲ சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 4 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
▲ 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
▲ கனடா 11 Kg - 1200/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554528

## சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

- Midwives, Nurses, Domestic Nanny — Salary 800-1000 SGD
- Caregiver, Elder Caregiver — Salary 600-800 SGD
- House Maid Singapore — 600 SGD

16.11.2022 அன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் நேர்முகத் தேர்வு
இடம் : Subas hotel - Jaffna
நேரம் : காலை 9.30 AM - மாலை 2.00 PM
சிங்கப்பூர் தொழில் வழங்குனரால் நேர்முகத் தேர்வு நடைபெறும்.
ஆகக்குறைந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தொகை அறவிடப்படும்.

மலேசியாவில் வேலைவாய்ப்பு. ஆண்கள்/ பெண்கள்
Hotel உதவியாளர் Malaysia 1500 MYR
நேர்முகத் தேர்வுக்கு வரும் போது Passport, சுயவிபரக்கோவை (CV) கொண்டு வரவும்

புருனே நாட்டில் வேலைவாய்ப்பு
- பொது உதவியாளர் – ஆண் (40 வயதுக்குட்பட்டோர்)
- சம்பளம் 500 புருனே டாலர்கள் +OT
- மேலதிக நேரக் கொடுப்பனவுகள்
- விரைவான புறப்பாடுகள்

முன் அனுபவம் தேவையில்லை உடன் விண்ணப்பிக்கவும் உணவு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவிற்கு உதவி ஆட்கள் தேவை

Orient Lanka Employment Agency (Lic no 2755)
0777228231
அனுசரணையுடன் நேர்முக தேர்வு நடைபெறும்

# விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும். (CS 21636) (3/6)

தொடர்பு
077 843 5502, 074 373 9982

## யா/ நடேஸ்வரக் கல்லூரி
காங்கேசன்துறை

ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக (1997 – 2022) நிர்மாணிக்கப்பட்ட

# விஞ்ஞான ஆய்வு கூடம் திறப்பு விழா

காலம் : 11.11.2022 வெள்ளிக்கிழமை
நேரம் : 9.00 மணி

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

(CS 21687) (3/6)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.10.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் நடராஜா ஜெயராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (09.11.2022) புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் **துர்க்கா மணிமண்டபத்தில்** (345, கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்) நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

25/1,அம்பலவாணர் வீதி,
அத்தியடி
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
0779599527

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 - 09 - 1950



விண்ணில் 09 - 11 - 2021

## லயன் சின்னத்தம்பி செல்வநாயகம்

உடல் வருத்தம் பாராத உண்மை
உழைப்பின் உதாரணம் நீங்கள்...!
ஆண்டவன் அடியில் நீங்கள் இருந்தாலும்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவில் நாங்கள் ...!

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

077 909 1097 (ஊஜ)(3-6)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-
- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.